**செய்தி வெளியீடு எண்: 66** **நாள்:27.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மீன்வளத்தை மேம்படுத்தவும், மீன்வளத்தைப் பெருக்குவதில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும், மீன்வளக் கல்வியை ஊக்குவிப்பது மிக மிக அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு நாகப்பட்டினம் தாலுக்காவில் பனங்குடி மற்றும் நாகூர் முட்டம் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில் மீனளப் பல்கலைக் கழகம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், உள்நாட்டு மீன் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கும், தற்போதுள்ள உள்நாட்டு நீர்வளங்களை முழுமையாக பயன்படுத்தி மீன்பிடிப்பை அதிகப்படுத்துவதற்கும், நவீன வசதிகளுடன் கூடிய மீன் விதைப் பண்ணைகளை தமிழகத்தில் 11 இடங்களில் 37 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கும் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுவதற்கு ஏற்றவாறு ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம், உட்புற சாலை வசதி, தெரு விளக்கு வசதி, தண்ணீர் வசதி, கழிவு நீர் வடிகால் வசதி மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகிய வசதிகளுடன் கூடிய மீன் இறங்கு தளங்களை 63 கோடி ரூபாய் செலவில் அமைக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

தற்பொழுது போதுமான பதப்படுத்தும் வசதிகள் இன்மையாலும், சுகாதாரமற்ற முறையில் மீன்களை கையாளுவதாலும், மீன்கள் மற்றும் பிற கடல் உணவுப் பொருட்கள் விரைவாக கெடுவதனால், மீனவர்களுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது.

மீன்களை முறையாக பதப்படுத்துவதன் மூலம் பதப்படுத்தப்பட்ட மீன்களை வெளிநாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய இயலும். இதன் மூலம் அந்நிய செலவாணி அதிக அளவில் கிடைப்பதுடன், மீனவர்களின் வருமானமும் உயரும்.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் அரசு-தனியார் ஒத்துழைப்பின் மூலம் 13 மீன்பிடி நகரங்களில் மீன் பதப்படுத்தும் பூங்காக்களை ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. அதன் அடிப்படையில் முன் மாதிரியாக கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் பயன்பெறும் வகையில், கடலூர் மாவட்டம் பெரிய கங்கணாங்குப்பம் கிராமத்தில் 1.94 ஏக்கர் நிலப்பரப்பில் 14 கோடி ரூபாய் செலவில் மீன்பதனிடும் பூங்கா ஒன்றும், நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் கிராமத்தில் 2.19 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 23 கோடி ரூபாய் செலவில் மீன் பதனிடும் பூங்கா ஒன்றும், என இரண்டு மீன்பதனிடும் பூங்காக்களை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கால்நடை பராமரிப்புத்துறையில் கால்நடை கிளை நிலையங்களில் பணியாற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு உறுதுணையாக அந்நிலையத்தை சுத்தம் செய்து, தண்ணீர் எடுத்து வைக்கும் பணிக்காக, துப்புரவுக் கட்டணமாக மாதம் ஒன்றிற்கு 60 ரூபாய் பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காக கால்நடை கிளை நிலையங்களில் 712 பகுதி நேரப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் பணித்தன்மையை

கருத்தில் கொண்டும், தற்பொழுதுள்ள விலைவாசி நிலைமையைக் கருத்தில் கொண்டும், கால்நடை கிளை நிலையங்களில் துப்புரவுப் பணி ஆற்றுபவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை 60 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 27.1.2013.